**தமிழ்நாடு அரசு**

கல்லூரிக்கல்வி - சென்னை மாநிலக்கல்லூரிக்குச் சொந்தமான மெரினா விளையாட்டு மைதானத்தை சிம்சன் நிறுவனம் சீர்ப டுத்துதல் ,நிர்வகித்தல்- ஆணை வெளியிடப்படுகிறது.

---

**உயர்கல்வி (ஜி1)துறை**

அரசு ஆணை நிலை எண்.443
நாள்: 8.11.2000

படிக்கப்பட்டவை:

1. கல்லூரிக்கல்வி இயக்குநரின் கடித எண். 73648/இ3/97 நாள்.1.11.97, 21.4.98
2. கல்லூரிக்கல்வி இயக்குநரின் கடித எண்.15771/இ3/99 நாள்.20.8.99, 15.5.2000.,5.7.2000
3. சிம்சன் நிறுவனக்கடித எண்.ப்பி 7561-98 நாள்.25.10.97,29.1.98,10.8.98,
4. சிம்சன் நிறுவனக்கடித எண். ப்பி.டி 092.2000 நாள்.4.2.2000
5. சிம்சன் நிறுவனக்கடித எண். ப்பி.டி547.2000 நாள்.20.6.2000
6. சிம்சன் நிறுவனக்கடித எண். ப்பி.டி608.2000 நாள்.3.7.2000

**ஆணை:**

பார்வை 1 மற்றும் 2ல் படிக்கப்பட்டுள்ள கடிதங்களில் சென்னையிலுள்ள சிம்சன் நிறுவனம்., சென்னை மாநிலக்கல்லூரிக்குச் சொந்தமான மெரினா சிரிக்கெட் மைதானத்தை தத்து எடுத்து புதுப்பித்துத்தர விரும்புவதாகவும் அம்மைதானத்தில் உள்ள அமருமிடம் (Pavilion) புதுப்பித்தல், சுற்றுச்சுவர் கட்டுதல், கிரிக்கெட் ஆடுகளத்தை மீண்டும் அமைத்தல் மற்றும் ஓடு பாதைகள் அமைத்தல் ஆகிய பணிகளைச் செய்து தருவதாகவும், அம்மைதானத்தைப் புனரமைக்கும் பணிகளுக்காக அரசிற்கு நிதிச்சுமை எழாது என்றும், மாநிலக்கல்லூரி மாணவ மாணவியர் விளையாட்டுத் திறனை வளர்த்துக் கொள்ள பெரிதும் உதவியாக இருக்கும் என்றும் கல்லூரிக்கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்

2. மேலே பத்தி 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துரு தொடர்பாக சிம்சன் நிறுவனம் ஒரு ஒப்பந்தப் பிணைப் பத்திரம் அளிக்கும் என்று கூறி அதற்கான வரைவு ஒப்பந்தப் பிணைப் பத்திரத்தினை அரசிற்கு அனுப்பியுள்ளார். பிணைப்பத்திரத்தில் ஒப்பந்தக்காலம் 15 ஆண்டுகள் என்றும், ஒப்பந்தக்காலத்தை

எப்போது வேண்டுமானாலும் அரசோ/அந்நிறுவனமோ ஆறுமாத முன் அறிவிப்புக்கடிதம் கொடுத்து முடித்துக்கொள்ளலாம் என்றும், அம்மைதானத்தை வேறு யாருக்கும் வாடகைக்கோ, குத்தகைக்கோ விடக்கூடாது என்றும் அம்மைதனத்தை செப்பனிடுவது தொடர்பாக ரூ.15 லட்சத்திற்கு குறையாமல் அந்நிறுவனம் செலவிட்டு தொடர் செலவினத்தையும் ஏற்க வேண்டும் என்றும், அம்மைதானத்தில் சிம்சன் நிறுவனத்தால் எழுப்பப்படும் கட்டிடங்கள் பொதுப்பணித்துறையின் தரத்தில் இருக்கவேண்டும் என்றும், குடிநீர், மின்சாரம் ஆகிவற்றிற்கான கட்டணங்கள் அந்நிறுவனம் செலுத்த வேண்டும் என்றும், அம்மைதானத்தை பராமரிக்கும்முழுப்பொறுப்பு அந்நிறுவனத்தைச் சார்ந்தது என்றும் அம்மைதானத்தை அந்நிறுவனம் ஓராண்டுக்கு 100 நாட்கள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் அம்மைதானத்தில் நடத்தும் விளையாட்டுப் போட்டிகளில் கிடைக்கும் லாபத்தில் சரிபாதியை 30 நாட்களுக்குள் அந்நிறுவனம் அரசுக்கணக்கில் செலுத்த வேண்டும் என்றும் ஒப்பந்தக்காலம் முடிந்த பிறகோ, ஒப்பந்தம் இடையில் முறிந்தாலோ எந்த ஒரு இழப்பீட்டையும் அந்நிறுவனம் கோரக்கூடாது என்றும் ஒப்பந்தக்காலம் முடிந்தாலோ/ முறிந்தாலோ, அந்நிறுவனம் அம்மைதானத்தில் நிறுவியவைகளை அப்படியே விட்டுவிட்டுச்செல்ல வேண்டும், போன்ற நிபந்தனைகள் இடம் பெறும் எனத் தெரிவித்துள்ளார்.

3. பார்வை 3,4,5 மற்றம் 6-ல் படிக்கப்பட்டுள்ள கடிதங்களில் சென்னை மாநகராட்சியைச் சிங்காரத் சென்னையாக மாற்றும் நோக்கத்திற்கு ஏற்ப சென்னை மாநிலக்கல்லூரிக்குச் சொந்தமான மெரினா கிரிக்கெட் மைதானத்தை தங்கள் பொறுப்பில் எடுத்து புதுப்பித்தத் தர விரும்புவதாகவும் அங்கு விளையாட்டு வீரர்கள் அமருமிடம் (Pavilion)சுற்றுச்சவர் ஆகியவற்றைக் கட்டி, கிரிக்கெட் ஆடுகளத்தை சீரமைத்து ஒடு பாதைகள் வடிவமைத்து தருவதாகவும், இதன் தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பந்தப் பிணைப்பத்திரம் (Memorandum of Understanding) தருவதாகவும் ஒப்பந்தப்பிணைப்பத்திரத்தில் அந்நிறுவனத்தின் செயல் இயக்குநர் மற்றும் செயலர் கையொப்பமிடுவார் எனவும் சிம்சன் நிறுவனம் கூறியுள்ளது.

4. மேலே பத்தி 1, 2 மற்றும் 3 -ல் கூறப்பட்டுள்ள கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினையும் சிம்சன் நிறுவனத்தின் கோரிக்கையினையும் பரிசிலித்த பின் மாநிலக்கல்லூரிக்குச் சொந்தமான மெரினா விளையாட்டு மைதானத்தை சென்னையிலுள்ள சிம்சன் நிறுவனம் ஒப்பந்தப் பிணைப்பத்திரத்தில் உள்ள விதிமுறைகளுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டு (Terms and conditions) தத்து எடுத்துக்கொள்ளவும் அவ்வொப்பந்தப்பத்திரத்தில் கல்லூரிக்கல்வி இயக்குநர் கையொப்பமிடவும் அரசு அனுமதி வழங்குகிறது. மேலும் அவ்வொப்பந்தப் பத்திரத்தின் காலம் 15 ஆண்டுகள் என்றும், அதனை ஆறு மாத முன்னறிவிப்பு மூலம் அரசோ/நிறுவனமோ முடித்துக்கொள்ளலாம்.. என்றும் அம்மைதானத்தை அந்நிறுவனம் வாடகைக்கோ குத்தகைக்கோ விடக்கூடாது என்றும் அம்மைதானத்தைச் செப்பனிடுவது தொடர்பாக ரூ.15 லட்சத்திற்கு குறையாமல் அந்நிறுவனம் செலவிடவேண்டும் என்றும் சிம்சன் மற்றும் அதன் குழுமம்

மற்றும் மற்ற நிறுவனங்களோடு கிரிக்கெட் போன்ற விளையாட்டுப் போட்டிகளை நடத்தலாம் என்றும் அம்மைதானத்தில் எழுப்பப்படும் கட்டிடங்கள் பொதுப்பணித்துறை நிர்ணயித்துள்ள தரத்தில் அமைய வேண்டும் என்றும் அம்மைதானத்தை பராமரிக்கும் பொறுப்பு அந்நிறுவனத்தைச் சார்ந்தது என்றும் அம்மைதானத்தை அந்நிறுவனம் ஓராண்டுக்கு 100 நாட்கள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் அம்மைானத்தில் நடத்தப்படும் விளையாட்டுப்போட்டிகளில் கிடைக்கம் லாபத்தில் சரிபாதியை அரசுக்கணக்கில் 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்றும் ஒப்பந்தக்காலம் முடிந்த பிறகோ, ஒப்பந்தம் இடையில் முறிந்தாலோ எந்த ஒரு இழப்பீட்டையும் அந்நிறுவனம் கோரக்கூடாது என்றும், ஒப்பந்தக்காலம் முடிந்தாலோ, முறிந்தாலோ அந்நிறுவனம் அம்மைதானத்தில் நிறுவியவைகளை அப்படியே விட்டு விட்டுச்செல்ல வேண்டும் என்றும் மற்றும் இவ்வாணையுடன் இணைக்கப்பட்டுள்ள ஒப்பந்தப் பிணைப் பத்திரத்தில் கூறப்பட்டுள்ள விதிமுறை மற்றும் வரையறைகளின்படி அந்நிறுவனம் செயல்படவேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலும், மாநிலக் கல்லூரியின் மெரினா கிரிக்கெட் மைதானத்தை சீர்படுத்துவது தொடர்பாக சிம்சன் நிறுவனம் எடுத்த நடவடிக்கை குறித்து ஒப்பந்தம் ஏற்பட்ட நாளிலிருந்து 3 மாதங்களுக்குள் அரசுக்கு அறிக்கை அனுப்புமாறு கல்லூரிக்கல்வி இயக்குநருக்கு அரசு ஆணையிடுகிறது

(ஆளுநரின் ஆணைப்படி)

இ.வீ. மணிவண்ணன்
அரசு செயலாளர்

பெறுநர்

கல்லூரிக்கல்வி இயக்குநர் ,சென்னை-6(இணைப்புடன்)
சிம்சன் நிறுவனம், சென்னை-2 (இணைப்புடன்)
(கல்லூரிக்கல்வி இயக்குநர் மூலமாக)
கல்வி அமைச்சரின் அலுவலகம்,,சென்னை-9
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை-3
ஆணையர், காவல்துறை,சென்னை-8
இருப்புக்கோப்பு/உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்